# ஜனவரி – 26 – வெள்ளி

### புனிதர்கள் திமோத்தி மற்றும் தீத்து

### ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்:திபா. 96:1

---

## முதல் வாசகம் : 2 திமோத்தி 1 : 1 – 8

என் அன்பார்ந்த பிள்ளை திமொத்தேயுவுக்கு, கடவுளின் திருவுளத்தால் கிறிஸ்து இயேசு அருளும் வாழ்வு பற்றிய வாக்குறுதிக்கு ஏற்ப அவருடைய திருத்தூதனான பவுல் எழுதுவது: தந்தையாம் கடவுளிடமிருந்தும் நம் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவிடமிருந்தும் அருளும் இரக்கமும் அமைதியும் உரித்தாகுக! என் முன்னோரைப் போன்று தூய்மையான மனச்சான்றுடன் கடவுளுக்குப் பணியாற்றும் நான் அவருக்கு நன்றி கூறுகிறேன். இரவும் பகலும் இடைவிடாமல் என் மன்றாட்டுகளில் உன்னை நினைவுகூருகின்றேன். உன் கண்ணீரை நினைவிற் கொண்டு உன்னைக் காண ஏங்குகிறேன் கண்டால் என் மகிழ்ச்சி நிறைவடையும். வெளிவேடமற்ற உன் நம்பிக்கையை நினைத்துப் பார்க்கிறேன். இத்தகைய நம்பிக்கை முதலில் உன் பாட்டி லோயி மற்றும் உன் தாய் யூனிக்கி ஆகியோரிடம் விளங்கியது. இப்போது உன்னிடமும் உள்ளதென உறுதியாக நம்புகிறேன். உன் மீது என் கைகளை வைத்துத் திருப்பணியில் அமர்த்தியபோது உனக்குள் எழுந்த கடவுளின் அருள்கொடையினைத் தூண்டி எழுப்புமாறு நினைவுறுத்துகிறேன். கடவுள் நமக்குக் கோழை யுள்ளத்தினை அல்ல, வல்லமையும் அன்பும் கட்டுபாடும் கொண்ட உள்ளத்தையே வழங்கியுள்ளார். எனவே நம் ஆண்டவருக்கு நீ சான்று பகர்வதைக் குறித்தோ அவர் பொருட்டு நான் கைதியாக இருப்பதைக் குறித்தோ வெட்கமடையத் தேவை இல்லை கடவுளின் வல்லமைக் கேற்ப நற்செய்தியின் பொருட்டுத் துன்பத்தில் என்னுடன் பங்குகொள்.

**பதில்பாடல்:** பிற இனத்தாருக்கு ஆண்டவரின் மாட்சியை எடுத்துரையுங்கள்

## நற்செய்தி : மாற் 4: 26 - 34

அக்காலத்தில் இயேசு தம் சீடர்களுக்குக் கூறியதாவது: ”இறையாட்சியைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். நிலத்தில் ஒருவர் விதைக்கிறார். அவர் எதுவும் செய்யாமலே நாள்கள் நகர்ந்து செல்கின்றன. அவருக்குத் தெரியாமல் விதை முளைத்து வளருகிறது. முதலில் தளிர், பின்பு கதிர், அதன் பின் கதிர் நிறைய தானியம் என்று நிலம் தானாகவே விளைச்சல் அளிக்கிறது. பயிர் விளைந்ததும் அவர் அரிவாளோடு புறப்படுகிறார் ஏனெனில் அறுவடைக் காலம் வந்துவிட்டது” என்று கூறினார். மேலும் அவர், ”இறையாட்சியை எதற்கு ஒப்பிடலாம்? அல்லது எந்த உவமையால் அதை எடுத்துச் சொல்லலாம்? அது கடுகு விதைக்கு ஒப்பாகும். அது நிலத்தில் விதைக்கப் படும்பொழுது உலகிலுள்ள எல்லா விதைகளையும்விடச் சிறியது. அது விதைக்கப்பட்டபின் முளைத்தெழுந்து எல்லாச் செடிகளையும் விடப் பெரிதாகி, வானத்துப் பறவைகள் அதன் நிழலில் தங்கக் கூடிய அளவுக்குப் பெருங்கிளைகள்விடும்” என்று கூறினார். அவர்களது கேட்டறியும் திறமைக்கு ஏற்ப, அவர் இத்தகைய பல உவமைகளால் இறைவார்த்தையை அவர்களுக்கு எடுத்துரைத்து வந்தார். உவமைகள் இன்றி அவர் அவர்களோடு பேசவில்லை. ஆனால் தனிமையாக இருந்தபோது தம் சீடருக்கு அனைத்தையும் விளக்கிச் சொன்னார்.

**தியானம்:** மிகச் சிறியதாக ஆரம்பிக்கின்ற ஒரு காரியம் மாபெரும் பலனைக் கொடுப்பதாக மாற்றமடைய முடியும் என்பதனை விளக்குவதாக இன்றைய நற்செய்தி அமைந்துள்ளது. அன்றும் இன்றும் என்றும் உயிர் வாழும் இறைவனது வார்த்தை மிகவும் சக்தி வாய்ந்த வல்லமையைக் கொண்டதென இறைமகன் இயேசு நற்செய்தியில் மேலும் தெளிவுபடுத்துகின்றார். நாம் இறை வார்த்தையை எமது உள்ளத்தில் பதியவைத்து அதற்கேற்ப மற்றவர்களோடு அன்புள்ளங்கொண்டு வாழுவோமாயின் இறைவன் எம்மை நற்கனி கொடுக்கும் விருட்சங்களாக மாற்றுவார் என்பது வெளிப்படை. இறைமகன் இயேசு தமது போதனைக் காலத்தில் விண்ணரசைப் பற்றிய நற்செய்தியை தமது வார்த்தையால் சிறு விதைகளாக விதைத்தது மட்டுமல்ல, நோயாளிகளைக் குணமாக்கி, பசாசுகளை அடக்கி, மரித்தோரை உயிர்ப்பிப்பதன் மூலம் பகிரங்கமாக அறிவித்தார். மக்கள் விடுதலைபெற்று, பாவங்களிலிருந்து மன்னிப்படைந்தனர். இறைமகன் இயேசுவின் காலத்தில் மட்டுமல்ல இன்றைய 2018ம் ஆண்டிலும் எமது மத்தியில் திருப்பலி, திருவருட்சாதனங்கள் வழியாக நற்செய்திப் பெருவிழாக்கள், மற்றும் தகவல் தொடர்பு ஊடகங்கள் மூலமாகவும் சிறு சிறு விதைகளாக இறையரசின் நற்செய்தி தொடர்ந்தும் பரப்பப்பட்டுக் கொண்டே இருக்கின்றது. எமது பரலோக தகப்பன் எங்கள் ஒவ்வொருவரையும் மாபெரும் சக்தி கொண்ட மனிதர்களாக மாற்றமடையுமாறு எதிர்பார்க்கவில்லை. அல்லது அவரை நாங்கள் அறிந்து கொண்டதன் பின்னர் “வழி தவறிப் போன ஊதாரிப் பிள்ளை” என அவர் தண்டிக்கப் போவதுமில்லை. மாறாக, எமது வாழ்வின் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அவரது உதவி எமக்குத் தேவை என்பது அவருக்கு நன்கு தெரியும். எனவே. இன்றைய நற்செய்தியை நாம் உற்று நோக்குமிடத்து இறையாட்சி என்பது விண்ணிலோ அல்லது வேறெங்குமல்ல எம்மிடையே தானாகவே வேரூன்றி பெரிதாக வளருகின்றது என்ற உண்மையை எமக்குப் படிப்பிக்கின்றது. எமது பரலோக தகப்பனை நோக்கி நாம் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு சிறிய முயற்சிகளையும் அவர் பெருமனதுடன் உவந்து ஏற்றுக்கொள்வார் என நம்பி விசுவசிப்போம்.